## DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 174/2024**

Deposition of Witness of PW2

| | | | |
|---|---|---|---|
| Name | : குணசேகரன் | Calling | : |
| Father/Husband's Name | : குப்புசாமி | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 10st March 2026.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது சோலாரில் குடியிருந்து கொண்டு டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.01.2023ம் தேதி காலை 11.00 மணியளவில் எனது லாரியை FC காட்டுவதற்காக சோலாரிலிருந்து RTO ஆபிசுக்கு சென்று கொண்டிருந்த போது RTO ஆபிசுக்கு அருகில் கூட்டமாக இருந்தது. விபத்து நடந்ததாக அருகில் இருந்தவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். நான் விபத்தில் நேரில் பார்க்கவில்லை. போலீஸார் விசாரித்த போது இவ்வாறு தான் சொன்னேன்.

**(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதின் பேரில் சாட்சி பிறழ் சாட்சியாக அறவிக்கப்படுகிறார்)**

கடந்த 03.01.2023ம் தேதி பகல் 11.30 மணிக்கு நான் எனது லாரியை FC காட்டுவதற்காக RTO ஆபிசுக்கு செல்வதற்காக ஈரோடு டூ கரூர் ரோட்டில் மெயின் ரோட்டில் நின்று கொண்டிருந்தேன் என்றும், அப்போது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி மாருதி ஸ்விப்ட் காரை அதன் ஓட்டுநர் சண்முகசுந்தரம் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து எவ்வித சைகையும் செய்யாமல் திடீரென வலதுபக்கம் திருப்பி எதிரில் வந்த இருசக்கர வாகனத்தில் மோதி இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் தூக்கி எறியப்பட்டார்

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.03.10 11:38:54 +0530

என்றால் அதை நான் பார்க்கவில்லை. விபத்தை நான் நேரில் பார்த்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.03.10 11:38:59 +0530

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 174/2024**

Deposition of Witness of PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : நடராஜ் | Calling | : |
| Father/Husband's Name | : ராமசாமி | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 10st March 2026.

எதிரி ஆஜரில் உள்ளார்.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

<u>**முதல் விசாரணை:**</u>

நான் தற்போது முத்துக்கவுண்டன்பாளையத்தில் வசித்து கொண்டு கோழிப்பண்ணை வைத்துள்ளேன். கடந்த 03.01.2023 ம் தேதி மதிய நேரத்தில் நான் முத்துக்கவுண்டன்பாளையத்தில் இருந்து வல்லால்ஈஸ்வரன் கோவிலுக்கு செல்வதற்காக நான் இருசக்கர வாகனத்தில் ஈரோடு டூ கரூர் ரோட்டில் சென்று கொண்டிருந்தேன். அப்போது கோவிலுக்கு திரும்பும் வளைவில் டீக்கடை அருகில் கூட்டமாக இருந்தது. நான் போய் பார்த்தேன். ஒரு இருசக்கர வாகனமும், காருக்கும் விபத்து ஏற்பட்டதாக அருகில் இருந்தவர்கள் சொன்னார்கள்.

2. அங்கு 2 பேருக்கு விபத்தில் காயம்பட்டது என்று 108 ஆம்புலன்ஸ் மூலம் அவர்களை அருகில் இருந்தவர்கள் அனுப்பி வைத்தார்கள். நான் விபத்தில் நேரில் பார்க்கவில்லை. போலீஸார் விசாரித்த போது இவ்வாறு தான் சொன்னேன்.

**(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதின் பேரில் சாட்சி பிறழ் சாட்சியாக அறவிக்கப்படுகிறார்)**

கடந்த 03.01.2023ம் தேதி பகல் 11.30 மணிக்கு நான் வல்லால் ஈஸ்வரன் கோவில் செல்வதற்காக ஈரோடு டூ கரூர் ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்று கொண்டிருந்தேன் என்றால் சரிதான். அப்போது எனக்கு

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.03.10 11:39:05 +0530

பின்னால் இருந்து வந்த மாருதி ஸ்விப்ட் காரை அதன் ஓட்டுநர் சண்முகசுந்தரம் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து எனக்கு முன்னால் வந்து எவ்வித சைகையும் செய்யாமல் திடீரென வலதுபக்கம் திருப்பினார் என்றால் நான் அதை பார்க்கவில்லை. எதிரில் வந்த இருசக்கர வாகனத்தில் ஸ்விப்ட் கார் மோதி இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் தூக்கி எறியப்பட்டார் என்றால் அதை நான் பார்க்கவில்லை. விபத்தை நான் நேரில் பார்த்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.03.10 11:39:09 +0530